# வேதாந்தமும், தத்துவங்களின் தோற்றம் வளர்ச்சியும்

# Vedanta - The Origin and Development of Philosophy

***முனைவர் மி. சு. எழிலரசி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி, தமிழ் நாடு, இந்தியா

**Dr. M. S. Ezhilarasi**
*Assistant Professor, Department of Tamil*
*St. Mary's College (Autonomous), Thoothukudi*
*Tamil Nadu, India*

## ஆய்வுச் சுருக்கம்

*வேதங்கள் ரிக், யசூர், சாம, அதர்வணம் என நான்காகத் தொகுக்கப்பட்டன. இவ்வாறு வேதங்களைத் தொகுத்தவர் வேத வியாசர் என்னும் தமிழ் அறிஞர். இந்த வேதங்களின் நிறைவாக, முடிபாகத் தோன்றியது தான் வேதாந்தக் கொள்கை. வேதம் அந்தம் ஸ்ரீ வேதாந்தம். அந்தம் என்றால் முடிவு. வேதம் என்பது பலியிட்டு வேள்விகள் செய்வதை அடிப்படையாகக் கொண்டது. பலி நிறை வேற்றத்தைக் குறித்து எழுந்ததே வேதாந்தக் கொள்கை.உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை போன்றவை வேதாந்தக் கொள்கை அடிப்படையில் தொகுக்கப்பட்டவை. இவ்வாறு தொகுக்கப்பட்ட வேதாந்தக் கொள்கைகளுக்கு உரைகளாகத் தோன்றியவையே சங்கரர் எழுதிய அத்வைதம், இராமானுஜர் எழுதிய விசிஷ்டாத்வைதம். மாத்துவர் எழுதிய துவைதம். வேதத்தின் நிறைவாக எழுந்த வேதாந்தக் கொள்கையாகிய கடவுள் கொள்கைக்கு எழுதப்பட்ட இந்த உரைகள், கடவுள் நம்பிக்கையற்ற பௌத்த, சமணக் கொள்கைகளை உள்வாங்கி, பிறவிச் சுழற்சி கொள்கை அடிப்படையில் விளக்கம் கூறியுள்ளன. எனவே இவற்றிற்கெல்லாம் மேலான கொள்கையாக, அனைத்துத் தத்துவங்களுக்கும் முடிந்த முடிபாகத் தோன்றியதே கடவுள் கொள்கையை சிறப்பாக விளக்கும் சைவசித்தாந்தம். இது ஆன்மீகக் கொள்கையை அறிவியல்*

## Abstract

*The Vedas were compiled into four by Rick, Yajur, Samam and Atharvanam. Thus the compiler of the Vedas was a Tamil scholar named Vedaviyasar. The Vedanta principle is what seems to be the complete end of the Vedas. Andham means End. Vedas are based on sacrificial offerings. Theological doctrine appeared to refer to the completion of sacrifice. Sankara's Advaita, Ramanuja's Visishtadvaita and Mathva's Duvaita appear to be the explanatory text for this Vedanta principle. This textual interpretationsare based on atheistic explanation for the theological doctrine of God. This textual interpretation also emphasizes the atheist's principle of birth cycle. Rejecting these textual explanations seemed like a philosophyof Saiva Siddhanthamthat ultimately became the final philosophy. The ideology that refuted all these textual explanations eventually appeared to be the final philosophy. Saiva Siddhantham is the unparalleled philosophy*

அடிப்படையில் விளக்கிக் காட்டும் தமிழரின் ஒப்பற்ற கடவுள் கொள்கை. இந்த சைவ சித்தாந்தத்திற்கு அடிப்டையாக விளங்குவது மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம்.

***முக்கியச் சொற்கள்:***

*வேதங்கள், வேதாந்தக் கொள்கை, வேத வியாசர், உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, பிரஸ்தானத்திரயி, மாண்டூக்ய காரிகை, அகம்பிரமஸ்மி, அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், முடிந்த முடிபு, சைவசித்தாந்தம், சிவஞானபோதம்.*

*of Tamil to explain spirituality scientifically. The basis for this was the Sivagnana Bodham written by Meykandar.*

***Keywords:***

*Vadas, Vedaviyasar, Vedanta Principle, Completion of Sacrifice, Principle of Birth Cycle, Saiva Siddhantham, Meikandar.*

**Citation**

Ezhilarasi, MS. "Vedanta - The Origin and Development of Philosophy." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 9–20.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20136227*

**முன்னுரை**

*நான் யார்? என்ற சிந்தனையே ஒரு தத்துவம் தோன்றுவதற்கான அடிப்படை நிலை. நான் யார் என எழுப்பப்படும் கேள்விக்குப் பலவகையான பதில்கள் நம்மால் கூறப்பட்டாலும், அந்தப் பதில்களையெல்லாம் தாண்டி ஆழமாகச் சிந்தித்தால் நான் ஒரு ஆன்மா? என்ற விடை கிடைக்கும். ஆன்மாவாகிய நான் இந்த உலகில் பிறப்பதற்கு முன் இருந்தேனா? இந்த வாழ்க்கை முடிந்து, இறந்த பிறகும் இருப்பேனா? என்பன போன்ற கேள்விகளுக்கு நம்முடைய சமயங்கள் விடை தருகின்றன. ஆத்திக சமயங்கள் கடவுள் நம்பிக்கை அடிப்படையிலும், நாத்திக சமயங்களாகிய சமணம் முதலான சமயங்கள் பிறவி சுழற்சிக் கொள்கை அடிப்படையிலும் பதில் தருகின்றன. இத்தகைய தத்துவ சிந்தனை நம் மண்ணில் முனிவர்களுக்கும், ஞானிகளுக்கும் இயல்பாகத் தோன்றி வளர்ந்தது. காரணம் ஐரோப்பியநாடுகளில் வாழ்பவர்கள் தங்களை அந்த சீதோஷ்ன நிலைக்குத் தகவமைத்துக் கொள்வதற்கே போராட வேண்டியிருக்கும். நமது நாட்டின் தட்ப வெப்பம் இயற்கையோடு தங்கி மனிதன் காடுகளிலும், குகைகளிலும் இயற்கை உணவை உண்டு, நீரைப் பருகி சிந்திக்க முடியும். எனவே தான் நம் தமிழ் மண் ஆன்மீகத்தின் விளைநிலமாகத் திகழ்கிறது.*

**வேதாந்தம்**

*"புரியாமல் போனாலே வேதாந்தம்" என்பதாகக் கண்ணதாசனின் பாடல் வரி ஒன்று உள்ளது. வேதாந்தம் என்பது புரியாத ஒன்று என்ற கருத்தில் "சும்மா வேதாந்தம் பேசாதே!" என்று பாமரராலும் உச்சரிக்கப்படுகிறது. முதன் முதலில் நான் யார்? என்ற கேள்வியை எழுப்பி, குரு- சீடர் உரையாடலாக, கேள்வி பதில்களாக வாய்மொழியாக வளர்ச்சி பெற்ற நூலே உபநிடதங்கள். இவை கடவுளுக்கும், மனிதனுக்குமான தொடர்பை விளக்குவதாகத் தோன்றின. இந்த உபநிடதங்களின் சாராம்சத்தை உள்வாங்கி அடுத்ததாக பிரம்ம சூத்திரம் தோன்றியது. பிரம்மமாகிய கடவுளைப் பற்றி சூத்திர வடிவில் தோன்றிய நூல். புராணங்களில் வரக்கூடிய பிரமன் என்பது வேறு. பிரமம் - என்றால் பெரியது. பெரியவர் அனைத்திற்கும் மூல காரணரானவர். கடவுளைப் பற்றி சூத்திர வடிவில் அமைந்த நூலே பிரம்ம சூத்திரம்.அடுத்ததாகத் தோன்றியது பகவத் கீதை. இறைவனுடைய கீதை. கடவுளைப் பற்றிய கருத்துக்கள் சிறப்பாக விளக்கப்பட்ட நூல். இதனைப் பிற்காலத்தில் மகாபாரதக் கதைக்கு கிளைக் கதை போன்று இடையில் கொண்டு செருகி விட்டார்கள். அதில் பல புராணங்களும் இடைச்செருகலாக இணைக்கப்பட்டிருக்கக் கூடும்.*

***உபநிடதங்கள்***
***பிரம்ம சூத்திரம்***
***பகவத் கீதை***

*ஆகிய இம்மூன்று நூல்களுமே பண்டைத் தமிழகத்தில் உருவான வேதாந்த இலக்கியங்கள்.*

**வேதாந்தம் என்றால் என்ன?**

*வேதம் + அந்தம் - வேதாந்தம். வேதங்கள் - ரிக், யசூர், சாம, அதர்வணம் - இந்த வேதங்கள் பலியை அடிப்படையாகக் கொண்டவை. பலியிடுதல் - ஆடு, மாடுகள் இவற்றைப் பலியிட்டு, அவற்றின் மாமிசத்தை நெருப்பிலிட்டு, பின் சோம பானம், சுரா பானம் இவற்றை அருந்தி உண்டதாக அந்த வேதங்களிலேயே காணப்படுகிறது. இந்தப் பழக்கம் ஆரியருடையது. இன்றுவரை தமிழரிடமும் குல தெய்வ வழிபாட்டிற்காக ஆடு மாடுகளைப் பலியிடும் வழக்கம். காணப்படுகிறது. அது தமிழரிடமிருந்து அங்கு சென்றதா என்பது தனிப்பட்ட ஆராய்ச்சி.*

*வேதங்களில் கடவுள் நம்பிக்கையும் இல்லை, கடவுள் வழிபாடும் இல்லை. இந்த வேதங்களை விளக்குவதற்குத் தோன்றியவை அறுவகை தரிசனங்கள்.*

*அறுவகை தரிசனங்கள்: (காட்சிகள்)*

1. *உத்தர மீமாம்சம்*
2. *புர்வ மீமாம்சம்*
3. *சாங்கியம்*
4. *யோகம்*
5. *நியாயம்*
6. *வைசேடிகம்*

*ஆகிய இவை வடமொழி வேதத்திற்கு வியாக்யானங்களாகத்(விளக்கம்) தோன்றியவை. இந்த அறுவகை தரிசனங்களுமே கடவுளைப் பற்றிப் பேசவில்லை. அவற்றிலும் நாத்திகக் கருத்துக்களே அதிகம் உள்ளன. வேதங்களில் கடவுளைப் பற்றிய புகழ்ச்சியில்லை. மாறாக சிவபெருமானை இகழ்வதாகச் சில இடங்கள் உள்ளன. வேதங்களில் அவர்கள் தேவர்களுக்கு வேள்விகள் செய்வது தான் சொல்லப்படுகிறது. தேவர்கள் கடவுள் அல்ல.* (Celestial Body) *மாற்று உருவங்களை உடையவர்கள். அதில் கடவுள் வழிபாடு என்ற பேச்சுக்கே துளியும் இடமில்லை. மீமாம்சை வேதங்களைப் பற்றிக் கேள்வி எழுப்புகிறது. ஆனால் கடவுளை நம்பவில்லை.*

*வேதங்களின் பெரும்பாலான பகுதி பிரார்த்தனைப் பாடல்களே. தாங்கள் வேள்வி செய்யும் தேவர்களை நோக்கி "நான் இதைக் கொடுக்கிறேன், நீ இதைக் கொடு" என்று பண்ட மாற்றம் செய்யும் வகையில் வேள்வி நிகழ்த்தப்பட்டது. தங்களுக்குத் தேவையானவற்றை அவர்களின் தெய்வங்களிடம் கோரியும், தங்களுக்குப் பிரியமானவற்றை அத்தெய்வங்களுக்கு வேள்வியில் படைத்தும் ஒரு கொடுக்கல் வாங்கல் முறையில் நிகழ்த்தப்படுபவை. எங்களுக்கு உடல் பலத்தை அருள வேண்டும், எங்கள் கால்நடைகளுக்கு வலிமை அருள வேண்டும் என்று வேண்டுதல் செய்வதாகவே இதில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் காணப்படும். ரிக், யசூர், சாம, அதர்வணம் எனப்படும் நான்கு வேதங்களில் ரிக் வேதத்தில் 10,600 பதங்கள் கொண்ட 1017 சூக்தங்கள் உள்ளன. இந்த வேதங்களின் காலகட்டத்தை டாக்டர். இராதா கிருஷ்ணன் கி.மு 15 -ம் நூற்றாண்டு எனக் குறிப்பிடுகிறார். பெரும்பாலும் கி.மு 1500 முதல் கி.மு 1000 க்கு இடைப்பட்ட கால கட்டமே வேதங்களின் காலமாக வரையறை செய்யப்படுகிறது. யசூர் வேதம் என்பது வெறும் வேள்விச் சடங்குகளாகத் தொகுக்கப்பட்ட பாடல்கள் அடங்கியது. இதில் 40 அத்தியாயங்களில் 1886 மந்திரங்கள் உள்ளன. ஏறக்குறைய ரிக் வேதத்தில் உள்ள பாடல்கள் தான் மற்ற வேதங்களில் மீண்டும் மீண்டும் இடம்பெற்றுள்ளன. சாம வேதத்தில் 32 அத்தியாயங்களில் 460 சூக்தங்கள் உள்ளன. அதர்வண வேதம் முற்றிலும் தனித்து நிற்பது. இதில் 20 காண்டங்களாக 131 மந்திரங்கள் உள்ளன. இது குறியீட்டுச் செயல்களுக்கான வேதம். வைதிக மரபில் இந்த அதா்வண வேதம் பெரிதும் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.*

*வேதங்களை அடுத்துத் தோன்றியது வேதாந்தக் கொள்கை. பிற்காலத்தில் இந்த வேதங்களைத் தொகுத்த தமிழரான வேத வியாசர் இந்த வேதங்களை மூன்று பகுதிகளாகப் பிரித்துத் தொகுத்துள்ளார். அவை:*

***கர்ம காண்டம்***

***உபாசன காண்டம்***

***ஞான காண்டம்***

***கர்ம காண்டமானது - பலிக் கொள்கை. பலியிடுதல் பற்றிப் பேசுவது.***

*உபாசன காண்டம் - இஷ்ட தெய்வங்களை வழிபடுதல் பற்றிப் பேசுவது.*

*ஞான காண்டம் - இறைவனைப் பற்றிப் பேசுவது. இதன் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டது வேதாந்தக் கொள்கை. பலி நிறைவுற்றது, இனி யாரும் பலி செலுத்தத் தேவையில்லை, உயிர்களைக் கொல்லக் கூடாது என்னும் உயா்ந்த நோக்கில் வேதாந்தக் கொள்கையை விளக்கினார் வேத வியாசர். மேலும் பலிக் கொள்கையை கடவுள் கொள்கையோடு இணைத்து, பலி கடவுளால் நிறைவேற்றப்பட்டு விட்டது. அவ்வாறு கடவுள் குருவாக வந்து பலியை நிறைவேற்றியதால் தான் அவர் மகாபலீஸ்வரன் என அழைக்கப்பட்டார். தன்னையே தியாகமாக்கியதால் தியாகராசன் எனப்பட்டார். இது வரலாறு. இந்த வரலாறுகளை எல்லாம் இன்று சைவர்களும், வைணவர்களும் கட்டாயம் தேடி அறிந்து கொள்ள வேண்டும். புராணமாக இருந்தாலும் அது முழுக்க கட்டுக்கதை அல்ல. அதில் தத்துவார்ந்த கருத்துக்கள் மறைந்து, பொதிந்து காணப்படுகின்றன. சில வரலாறும் கூட புராணங்களில் முற்றிலும் மாறுபாடு செய்யப்பட்டு திரிந்தும் காணப்படுகிறது. (எ-டு) மகாபலி ஈசனின் பெயர். அது அரசனின் பெயராக மாற்றப்பட்டு, அவன் ஆணவம் கொண்டவனாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பலவிவாதத்திற்குரிய கருத்துக்கள் புராணங்களில் ஏராளம் உள்ளன.*

*உபநிடதம் என்ற சொல்லுக்கு அருகே அமர்ந்து கொள்ளுதல் என்பது பொருள். இந்நூல் பெரும்பாலும் குரு சீடருக்கு உபதேசிப்பதாகவோ, குரு சீடர் விவாதங்களாகவோ உரையாடல்களாகவோ காணப்படும். தத்துவச் சிந்தனைகள் இந்த உபநிடதங்களில் தான் தொடங்குகின்றன. தத்துவ மரபின் வேர்கள் இங்கு தான் காணப்படுகின்றன. தரிசனங்களில் எழுப்பப்பட்ட கேள்விகள் இந்த உபநிடதங்களில் விரிவாக விவாதிக்கப்பட்டன. வேதத்தில் உள்ள சாரமற்ற கூறுகள் இதில் விமர்சிக்கப்பட்டு, ஒதுக்கப்படுகின்றன. வேதங்களைக் கடுமையாக மறுக்கக்கூடிய பகுதிகளும், எள்ளி நகையாடக் கூடிய பகுதிகளும் இதில் காணப்படுகின்றன. இவற்றைச் சுட்டிக்காட்டி தேவிபிரசாத் சட்டோபாத்யாய முதலிய தத்துவ ஆய்வாளர்கள் உபநிடத காலகட்டம் வேதங்களை மறுத்து எழுந்தது என்கிறார்கள்.*

***சாந்தோக்ய உபநிடதம்,***
***வானத்துக்கும் அப்பால்***
***மிக உன்னதத்தில் உள்ள***
***உலகங்களுக்கெல்லாம் அப்பால்***
***அனைத்துக்கும் அப்பால்***
***ஒளிரும் சோதி தான்***
***இங்கு அனைவரிலும் சுடர்கிறது (சாந்தோக்கிய உபநிடதம் (III 13 - 7))***

*வேதங்களில் உள்ள உலகியல் வேட்கையையும், வேள்விக் கர்மங்களின் சுயநலப் போக்கினையும் உபநிடதங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றன.*

*உபநிடதங்களைத் தொகுத்து விளக்கம் எழுதியவரும் வேத வியாசரே. இவைதான் வேதாந்த சூத்திரங்கள் அல்லது பிரம்ம சூத்திரம் எனப்படுகின்றன. வேதம் பலியைக் குறிப்பது. வேதாந்தம் பலி நிறைவேற்றத்தைக் குறிப்பது. பிரம்ம சூத்திரத்திற்குக் கொடுக்கப்பட்ட வெவ்வேறு விளக்கங்கள் தாம் பாஷ்யங்கள் அல்லது பாடியங்கள். ''பாடியம்'' என்றால்*

*விளக்கம் என்பது பொருள். இந்த விளக்கங்களைத் தருபவர்கள் உயர்வானவர்களாகக் கருதப்பட்டார்கள்.*

*இவர்கள் "ஆச்சாரியர்கள்" எனப்பட்டார்கள். இந்த பாஷ்யங்களைக் கொடுத்தவர்கள் தான் சங்கரர், இராமானுஜர், மாத்துவர் முதலியோர். அதாவது இவர்கள் மூல கர்த்தாக்கள் அல்லர். உரையாசிரியர்கள் தாம்!*

1. *உபநிடதங்கள்*
2. *பிரம்ம சூத்திரம்*
3. *பகவத் கீதை*

*இவை வேதாந்தக் கொள்கை அடிப்படையில் தோன்றிய நூல்கள். இவை "பிரஸ்தான திரயீ""* (Trible Text) *என சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகின்றன. இந்த மூன்றுக்கும் உரை செய்தவர்கள் தான் சங்கரர், இராமானுஜர், மாத்துவர் ஆகிய அந்த ஆச்சாரியர்கள். அவர்கள் சொந்தமாக புதிதாக ஒன்றையும் உருவாக்கவில்லை. ஏற்கனவே தொகுக்கப்பட்ட வேதாந்தக் கொள்கையாகிய கடவுள் கொள்கைக்குக் கடவுள் மறுப்புக் கொள்கை அடிப்படையிலான உரைகளைக் கொடுத்துள்ளனர். அவையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்பன.*

**வேதாந்தக் கொள்கை**

*ஆதி வேதாந்தம் பிற தரிசனங்களுடன் தீவிரமாகப் போராடியது. உலகத் தோற்றம் பற்றி விவாதிக்கின்ற பொழுது மூலப்பிரகிருதியில் இருந்து தான் பிரபஞ்சம், உயிர்கள் தோன்றின என்பது சாங்கியர் கூற்று. இந்த அடிப்படையில் பேசப்படுவது தான் பெருவெடிப்புக் கொள்கை எனப்படும்* (Big bang theory) *அதாவது ஒரு மூலப்பொருள் வெடித்துச் சிதறி அதிலிருந்து சூரியன், கோள்கள் முதலியவை தோன்றின. பின் உயிரினங்கள் தோன்றின என்று விளக்குவது. இந்த அடிப்டையைக் கொண்டது தான் படைப்பு பற்றிய டார்வின் கொள்கை* (theory). *இந்த கொள்கைகளை மறுத்து வேதாந்தம் கேள்வி எழுப்புகிறது. பிரபஞ்சமானது சடப்பொருள். சடப்பொருளிலிருந்து உயிர் எவ்வாறு பிரிய முடியும் என வேதாந்திகள் கேள்வி எழுப்பினர். இந்த வினாவை எழுப்பும் பாதராயணர் இயற்கை செயலூக்கம் பெற, உயிர் பெற வேண்டும் என்றால் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இருந்தாக வேண்டும். அந்த சக்தி பிரமமே என வாதிடுகிறார். வேதாந்தம் அனைத்தையும் காரண காரியங்களுடன் ஆராய்ந்து அறிவியல் அடிப்படையில் நிறுவுகிறது. குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற டார்வின் கொள்கைகடவுள் கொள்கைக்கு முரணான நாத்திகக் கொள்கை. ஆனால் நம்முடைய மக்கள் பலர் கடவுள் நம்பிக்கையுடையவர்களாய் இருந்து கொண்டு இந்த டார்வின் கொள்கையையும் ஏற்றுக் கொள்கிறார்கள். குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பார்கள். அதுதான் வேடிக்கை. கடவுள் தான் உலகை, உயிர்களைப் படைத்தார் என்பதே கடவுள் கொள்கை. வேதாந்தமானது மானிட சமத்துவத்திற்கும், பொது நீதிக்கும், விடுதலைக்குமான பாதையை வகுத்துக் காட்டியது.*

**வேதாந்தத்திற்கான உரைகள்**

*இந்த வேதாந்தக் கொள்கைகளுக்கு உரை எழுதியவர்கள் ஆச்சாரியார்கள் எனப்பட்டனர். (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு)*

1. *சங்கரர் எழுதிய கேவல அத்வைதம்,* (Uncompremising Monism)
2. *இராமானுஜர் எழுதிய விசிஷ்டாத்வைதம்,* (Qualified Monism)
3. *மாத்துவர் எழுதிய துவைதம்.* (Dualism) dho - *இரண்டு*

*இந்த மூன்று உரைகளுமே தம்முள் குறைபாடுடையவையாக விளங்கின. காரணம் கடவுள் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட வேதாந்தக் கொள்கைக்கு கடவுள் நம்பிக்கையற்ற பிறவிசுழற்சிக் கொள்கை அடிப்படையில் விளக்கம் தந்தன. ஆன்மாவைத் தனியாகப் பிரித்தறியவில்லை. உயிரைப் பற்றி மட்டுமே விளக்கம் தந்தன. இந்த 1. அத்வைதம் 2. விசிஷ்டாத்வைதம் 3. துவைதம் இவற்றை எழுதிய சங்கரர், இராமானுஜர் மாத்துவர் மூவருமே பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள். நாம் ஏற்கனவே பார்த்தோம். பிராமணர்கள் வேதக் கொள்கையாகிய பலிக் கொள்கையைப் பின்பற்றியவர்கள். பலி செலுத்தி இயற்கையை வழிபட்டவர்கள். பின் தமிழர்கள் பலியை நிறைவு செய்து வேதாந்தக் கொள்கையாகிய கடவுள் கொள்கையை போதித்து நூல்களைத் தொகுத்தனர். அந்த நூல்களுக்கு மீண்டும் பலிக் கொள்கையைப் பின்பற்றியவர்கள் உரை எழுதியதால் அங்கு மீண்டும் சிக்கல், குழப்பம் உருவாகியது.*

*எனவே மேற்கண்ட குறைபாடுடைய உரைவிளக்கங்களுக்கெல்லாம் மணிமுடியாக, சிறந்த விளக்கமாகத் தோன்றியதே சைவசித்தாந்தம். சித்தம் அந்தம் - முடிந்த முடிபு. இதுவே இறுதியான, சிறப்பான முடிவு. அறிவியல் அடிப்படையில் ஆன்மீகத்தை நிலைநாட்டுவது. இதைவிடச் சிறப்பான விளக்கம் வேறு இல்லை. இதனை இறுதியில் விரிவாகக் காண்போம்.*

**அத்வைதம்**

*அத்வைத உரையை எழுதியவர் ஆதி சங்கரர். இவர் கேரளாவில் உள்ள காலடி என்னும் ஊரில் பிறந்தவர். இவரது காலம் கி.பி 8- ஆம் நூற்றாண்டு. அத்வைதம் இரண்டு அற்றது. பிரம்மம் மட்டுமே உண்மை. உயிர், உடல், உலகம் என்பதே ஒரு மாயை. அது சத்துமில்லை, அசத்துமில்லை.*

*சங்கரர் வரையறுக்கும் மாயைக்குத் தோற்றமும் இல்லை, முடிவும் இல்லை. மண்ணில் இருந்து செய்யப்படும் மண்பானை, உடைந்தவுடன் மண்ணுக்குள்ளே போய் விடுகிறது. தங்கத்தில் இருந்து செய்யப்படும் நகைகள், உருக்கியவுடன் தங்கத்திற்கே போய் விடுகின்றன. இது தான் மாயை. பிரம்மத்தில் இருந்து தான் அனைத்தும் செய்யப்படுகின்றன. காலம் முடிந்ததும் பிரம்மத்திற்கே போய் விடுகின்றன. கடலில் இருந்து வரும் அலைகள், அலை போலத் தோற்றம் அளித்தாலும் அவை கடலின் ஒரு வடிவம் தான்!. அப்படித்தான் இந்த உலகமும் ஒரு மாயை. அத்வைதக் கொள்கையின்படி, உலகமே ஒரு மாயை என்றால், மலம் என்கிற பாவம் என்பதும் மாயை தான். மலம் என்பதும், உலகம் என்பதும் மாயை என்றால் அது சைவ சித்தாந்தக் கொள்கைக்கு முரணானது. எல்லா மனிதர்களும் பாவ இயல்புடன் பிறக்கிறார்கள், ஆதி மலமாகிய ஆணவத்தால் பிணைக்கப்பட்டுள்ளனர் என்னும் சைவ, வைணவக் கொள்கைக்கு எதிரானது. பாவம் என்பதே மாயை என்ற பின்னர், "நானே கடவுள்" (அகம் பிரம்மாஸ்மி) எனக் கூறும் நிலை உருவாகிறது. அதாவது, கடவுளுக்குச் சமமாகலாம் என்ற போலி ஆத்திகக் கொள்கை உருவாக்கப்படுகிறது. உடல், உயிர், ஆன்மா, ஆணவம் என்ற நான்கில் அத்வைதத்திற்கு உடல், உயிர் இரண்டு மட்டுமே தெரியும். ஆன்மா, ஆணவம் பற்றித் தெரியாது. பிரம்மம் பற்றிப் பேசினாலும் உண்மையான கடவுள் பற்றித் தெரியாது. அதனால் தான் நானே கடவுள் என்னும் நாத்திகக் கொள்கை வெளிப்படுகிறது. அது போலியாக ஆத்திகக் கொள்கையாகக் காட்டப்படுகிறது. கடவுளைப் பற்றிய தெளிவான புரிதல் இன்மையால் சமணத்தில் இருந்து பிறவிச் சுழற்சிக் கொள்கையை எடுத்துக்*

*கொள்கிறது. உயிருக்கும், ஆன்மாவிற்கும் வேறுபாடு தெரியாததால், சாதி ஏற்றத் தாழ்வுக் கொள்கையைத் தத்துவ அடிப்படையில் அத்வைதம் நியாயப்படுத்தத் தொடங்கி விடுகிறது.*

*வேதாந்தக் கொள்கை வேத வியாசர் என்ற தமிழரால் தொகுக்கப்பட்டது. ஆனால் அதற்கு இவர் எழுதிய சமஸ்கிருத உரை உலக அளவில்* (Vedhandha Philosophy) *என்று அதிகமாக பிரபலியமாகி விட்டது. ஏனெனில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது. சமஸ்கிருதம் உலகின் மூத்த மொழி என்றும் சிலரால் நம்பப்படுகிறது.இந்தியாவின் ஆன்மீகத் தத்துவம் என்றாலே அத்வைதம் என்பதாகப் பார்க்கப்படுகிறது. இந்த அத்வைதம் சங்கரர் தாமே புதிதாக உருவாக்கிய நூல் அல்ல. ஏற்கனவே உள்ள பிரம்ம சூத்திரம் முதலான நூல்களுக்கு உரை எழுதியதே அத்வைதம். அதாவது நான் யார்? என்ற கேள்விக்கு இந்த சங்கரர் தரும் அத்வைத விளக்கம். பரமாத்மா, ஜீவாத்மா இரண்டும் வேறு வேறு அல்ல. ஒன்றே. ‘‘அகம்பிரமாஸ்மி’’- நானே கடவுள். (அ + வைதம் -* No Two*)*

*ஆதிசங்கரரின் இந்தக் கொள்கையே அத்வைதம். துவைதம் - என்றால் இரண்டு. அ + வைதம் என்றால் இரண்டு இல்லை. அதாவது இரண்டு பொருள்கள் இல்லை. ஒன்று மட்டுமே. எந்த ஒன்று மட்டுமே இருக்கிறது என்று கேட்டால், பரமாத்மா, ஜீவாத்மா இரண்டில் ஒன்று மட்டுமே இருக்கிறது என்பது விளக்கம். அது எவ்வாறு என்று கேட்டால் நான் ஜீவாத்மாவாகவும் இருக்கிறேன், அதே நேரத்தில் பரமாத்மாவாகவும் இருக்கிறேன் என்பது விளக்கம். நான் என்பது அகம். அகம்பிரமஸ்மி- நான் பரம் பொருள். நான் பிரமமாகவும் இருக்கிறேன். ஜீவனாகவும் இருக்கிறேன். இவ்வாறு அகம்பிரமஸ்மி - அதாவது நான் பரம் பொருள் என்று எல்லோரும் சொல்லிவிட முடியாது. அது குறிப்பிட்டவர்கள் (குறிப்பிட்ட இனம்) தான் சொல்ல முடியும் என்பதாகவும் காணப்படுகிறது.*

*இறைவனை அடையும் பக்தி மார்க்கத்தை விளக்குபவை உபநிடதங்கள். ஆனால் அவற்றுக்கு எழுதப்பட்ட இந்த அத்வைத உரை அக்கருத்துக்களுக்கு எதிரான, முரணான கொள்கையாக உள்ளது. இந்த கொள்கையும் சங்கரர் எப்படி உருவாக்கினார், தானே சொன்னாரா என்றால், இல்லை. அவருடைய குரு கோவிந்தாச்சாரியார். அவருடைய குரு கௌடபாதர். சங்கரரின் குருவின் குருவாகிய இந்த கௌடபாதர் - மாண்டுக்ய உபநிடதத்திற்கு ஒரு உரை எழுதியிருக்கிறார். அதற்கு ‘‘மாண்டுக்ய காரிகை’’ என்று பெயர். காரிகை என்றால் தத்துவ தொகுப்பு. அதில் தான் முதன்முதலில் அவர் இந்த அத்வைத கொள்கையை அதிகம் எழுதியுள்ளார். இந்த கௌடபாதர் ஒரு பௌத்தர். இவர் கடவுளைப் பற்றிப் பேசாத பௌத்த மதக் கொள்கையின் அடிப்படையில் இந்த மாண்டுக்ய காரிகையை எழுதினார். அந்தக் கருத்துக்களை எடுத்து மாற்றம் செய்து அப்படியே கடவுள் நெறியை விளக்கக் கூடிய உபநிடதங்களுக்கு உரை எழுதிவிட்டார். சங்கரர் தம்முடைய வேதாந்த உரையில் பௌத்தக் கொள்கைளையே பெரிதும் பின்பற்றியிருப்பதால் பின்பு அவரை எதிர்த்தவர்கள் பிரசன்ன பௌத்தன் அதாவது மாறுவேடமிட்ட பௌத்தன் என்று கூறி பழித்தார்கள் எனக் குறிப்பு உள்ளது.*

*இதை எதிர்த்து இது தவறு என்று விளக்கத் தோன்றியவையே இதற்கு அடுத்துத் தோன்றிய இராமானுஜர் மற்றும் மத்துவரின் உரைகள். ஏன் விவேகானந்தர் கூட தம் நூலில் இந்த அத்வைதக் கொள்கை தவறானது என மறுத்திருக்கிறார்.* (Ex. The Complete works of

Vivekananda) *என்ற நூலில் காணலாம். பிராமணர் மட்டுமே இந்த நானே கடவுள் என்பதைச் சொல்ல வேண்டும். சூத்திரர் சொன்னால் நாவை வெட்ட வேண்டும் என்று எழுதியிருக்கும் கருத்துக்களை விவேகானந்தர் சுட்டிக்காட்டி மறுக்கிறார். கடவுளை மக்களிடம் விளக்கிக் காட்டுவதற்குத் தோன்றிய உபநிடதம், பகவத் கீதை கருத்துக்களை* (dialute) *நீர்த்துப் போகச் (சாரமற்று) செய்யும் விதத்தில் தோன்றியதே இந்த அத்வைத உரை.*

*கடவுள் அன்பானவர் என்கிறது உபநிடதம். ஆனால் அத்வைதம் கடவுளைப் பற்றிய இந்த விளக்கங்கள் எல்லாம் கீழான நிலையிலிருந்து* (Vevakarikka level) *சொல்லப்படுபவை. நானே கடவுள் என்பதே மேல் நிலை* (Paramarthika level) *என்கிறது. யோகா முதலிய சாதனங்களைச் செய்து இந்த மேல் நிலையை அடைய வேண்டும். இது குறிப்பிட்ட மேல் வாக்கத்திற்கு மட்டுமே உரியது. இந்த உலகில் நாம் காணும் பொருட்கள் எல்லாம் மாயை. அதாவது வெறும் பிரமை போன்றது. (எ.டு) ஒரு மல்லிகைப் புவை எடுத்துக் கொண்டால், அதிலிள்ள மணம், மென்மை, வெண்மை நிறம் இம்மூன்று பண்புகளையும் தனித்தனியே பிரித்து விட்டால் மல்லிகை என்ற ஒரு பொருளே இருக்காது என்பதாக விளக்கம் தருகிறார்கள். ஆனால் சைவசித்தாந்தம் கூறும் மாயை என்பது வேறு. இக்கொள்கையில் சமணத்தின் பிறவி சுழற்சிக் கொள்கையும், அதன் அடிப்படையில் சாதி ஏற்றத் தாழ்வுக் கொள்கைகளும் புகுத்தப்பட்டுள்ளன. ஆனால் இவர் தம் குருவின் குரு வழியாக பௌத்தக் கொள்கையை உள்வாங்கி இக்கொள்கையை உருவாக்கியிருந்தாலும், பின்பு பௌத்தத்தையே அழித்து நிர்மூலமாக்கினார். ஆந்திரப் பகுதிக்குச் சென்று பௌத்தர் வாழும் பகுதியில் சென்று அவர்களுடன் வாதிட்டு அழித்தார் என்ற குறிப்பும் உள்ளது. சமணத்தின் பிறவிச் சுழற்சி கொள்கையும் உள்வாங்கப்பட்டு, சைவத்திற்குள் நுழைக்கப்பட்டது. சைவ சித்தாந்தங்களுக்கு உரிய உரைகளுள் இப்பிறவி சுழற்சிக் கொள்கைகள் வலிந்து திணிக்கப்பட்டுள்ளன. சாதி ஏற்றத் தாழ்வுக் கொள்கையும் தத்துவ அடிப்படையில் வலிந்து நியாயப்படுத்தப்பட்டுள்ளது.*

**விசிஷ்டாத்வைதம்**

*இராமானுஜரின் காலம் கி.பி 11 ஆம் நூற்றாண்டு. இவருடைய விசிஷ்ட அத்வைதம், சங்கரரின் அத்வைதத்தை மிகத் தீவிரமாக எதிர்க்கிறது. விசிஷ்ட அத்வைதமானது இரண்டு பொருள் அல்ல, ஒன்று தான். ஆனால் சிறந்த ஒன்று. எப்படி? ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒரே பொருளினால் ஆனது. ஜீவாத்மா, பரமாத்மாவில் இருந்து வெளிப்பட்டது என்று கூறுகிறது. சிற்றுயிர் ஜீவாத்மா என்றும் பேருயிர் பரமாத்மா என்றும் குறிக்கப்படுகிறது. கடவுள் மட்டுமே இருக்கிறார். பிரம்மமே சத்து. இப்பேரண்டம் பிரம்மத்தின், அதாவது இறைவனின் உடல். உடலும் உயிரும் பிரிக்க முடியாதவை. இப்பேரண்டத்தின் வெவ்வேறு வடிவங்களுக்குக் கொடுக்கப்படும் பெயர்கள் அவருக்கும் பொருந்தும். இதே போல், பிரம்மத்திற்குக் கொடுக்கப்படும் பெயர்கள், உலகத்திற்கும் பொருந்தும். இறைவனே உயிர், நாம் அவரது உடல்.*

*பக்தியே முக்திக்கு வழி என்று கூறிய மெய்ஞானிகள் இந்த அத்வைதக் கொள்கையை எதித்தனர். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்று தான் என்று கூறினால் ஜீவாத்மா பரமாத்மாவை வழிபட வேண்டியதில்லை. எனவே இது தவறு என்று கூறி பக்தி நெறியை முதன்மைப்படுத்தியவர் இராமானுஜர். அத்வைதத்தை எதிர்த்து இராமானுஜர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது தான் விசிஷ்டாத்வைதம். அதாவது விஷேச அத்வைதம்.* (Qualified Monism)

*பிரியமும் சேவையும் (பிரபத்தி) தான் மானிட விடுதலைக்கு வழி என்றார். இவர் பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு என்று கூறினாலும், முக்தி நிலையில் தன் குறைகளும், அடையாளங்களும் நீங்கப் பெற்ற ஜீவாத்மா இறுதியில் பரமாத்மாவுடன் இணைந்து விடுகிறது என்றார். இது விசேஷ அத்வைதம். எனவே விசிஷ்டாத்வைதம் ஆகும்.*

*நம்மாழ்வார் எழுதிய திருவாய்மொழி "தமிழ் வேதம்" என்று வழங்கப்படுகிறது. இதற்கு விசிஷ்டாத்வைத நோக்கில் உரை எழுதியவர் இராமானுஜர்.*

**துவைதம் (Strict Dualism)**

*மத்வாச்சாரியார் வகுத்த துவைதம் பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு என்றது. பரமாத்மா எவ்வித வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பாற்பட்டது. ஜீவாத்மா உடலோடு கூடியிருப்பதால் காமம், குரோதம், மோகம் போன்ற குறைகளுக்கு ஆட்படக் கூடியது. இவற்றிலிருந்து விடுதலை பெற ஜீவாத்மா பரமாத்மாவை வழிபட வேண்டும். இதுஇருமை வாதம் எனப்பட்டது. மத்துவர் அத்வைதத்தை மிகக் கடுமையாக எதிர்க்கிறார். பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு. அதாவது, பேருயிர் வேறு - சிற்றுயிர் வேறு! பேருயிராகிய கடவுள் இவ்வுலகத்தைக் கட்டுப்படுத்தபவர். கடவுளுக்கும் நமக்கும் தாய் பிள்ளை உறவு கிடையாது. கடவுள் முதலாளி, நாம் வேலையாட்கள். அவருக்கு வேலை செய்வதன் மூலமே அவரது அன்பைப் பெற முடியும்.*

**பொதுவான குறைபாடுகள்**

*கடவுள், உயிர் ஆகியவற்றைத் தாண்டி, இம்மூன்றிற்கும் ஆன்மாவைப் பற்றித் தெரியாது.*

*ஆன்மாவைப் பற்றித் தெரியாததால், ஆன்மாவைப் பற்றியுள்ள மலமாகிய பாசம் பற்றியும் தெரியாது. கடவுள் மறுப்புக் கொள்கையாகிய பிறவிச் சுழற்சிக் கொள்கையில் சிக்கி, மூன்றுமே சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை ஆதா ிக்கின்றன.*

**சைவ சித்தாந்தம்**

*மேற்கண்ட கொள்கைகள் ஒரு பொருள் அல்லது இரண்டு பொருள்கள் பற்றி மட்டுமே பேசுகின்றன. பரமாத்மா, ஜீவாத்மா. ஆனால் சைவசித்தாந்தம் மூன்றாவதாக ஒரு பொருள் பற்றிப் பேசுகிறது. முப்பொருள் உண்மை. பதி, பசு, பாசம் - அதாவது கடவுள், ஆன்மா, உலகம். பாசம் - ஆணவம் ,கன்மம், மாயை என மூன்றாகப் பகுக்கப்படும். மற்ற மூன்று கோட்பாடுகளுக்கும் மாற்றாக, சைவ சித்தாந்தம் ஆன்மாவைப் பற்றிப் பேசுகிறது. அதாவது மற்ற மூன்று கோட்பாடுகளும் ஜீவாத்மா என்பதில் பிற உயிர்களையும், மனிதரின் ஆன்மாவையும் ஒன்றாக மதித்துப் பேசுகின்றன. ஆனால் சைவசித்தாந்தம் ஆன்மாவைத் தனியாகப் பிரித்தறிகிறது.*

*எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய முதல்வனைத் தென்னாட்டவராகிய தமிழ் மக்கள் சிவன் என்ற திருப்பெயராற் போற்றி வழிபட்டு வருகின்றனர். இதனைத்,*

***"தென்னாடுடைய சிவனே போற்றி***
***எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"***[2]

*என வரும் திருவாசகத் தொடரால் இனிது அறியலாம். சிவபெருமானை வழிபட்டு*

*அம்முதல்வனது திருவருட்டுணை கொண்டு உலகுயிர்கள் இயங்குந் திறத்தினைத் தமது வாழ்வியல் நுகர்ச்சியிற் கண்டு தெளிந்த தமிழ் மக்கள், தமது வாழ்வியலின் முடிந்த முடிபாகக் கண்டுணர்ந்த மெய்யுணர்வுக் கொள்கையே இடைக்காலத்தில் சைவ சித்தாந்தம் என்ற பெயரால் வழங்கப் பெறுவதாயிற்று.*

*சிவமாகிய பரம்பொருளை முதன்மையாகக் கொண்டு விளங்குவது ''சைவ சமயம்''. சிவத்தோடு சம்பந்தம் உடையது ''சைவம்''. சைவ சமயத் தத்துவங்களை விளக்குவது ''சைவ சித்தாந்தம்''. சித்தம் அந்தம் ஸ்ரீ சித்தாந்தம். சித்தம் - நிலைநிறுத்தப்பட்ட உண்மை. அந்தம் - முடிவு. முற்ற முடிந்த மெய்ப்பொருட் கொள்கை. அதாவது ஒவ்வொரு கொள்கையையும் நன்கு ஆராய்ந்து ''இஃது அன்று, இஃது அன்று'' என்று ஒதுக்கித்தள்ளி விட்டு, இறுதியில் ''இதுவே முடிந்த முடிபு'' எனவும், ''இதற்கு மேல் வேறெதுவும் இல்லை'' எனவும் அறுதியிட்டுக் கூறும் தத்துவமாக விளங்குவதால் இது சித்தாந்தம் எனப்பட்டது. ''அன்பின் வழியது உயிர்நிலை'', அதாவது உயிர்க்கும் உடம்புக்கும் தொடர்பாவது அன்பு என்றார் திருவள்ளுவர். அந்த அன்பையே ''சிவம்'' எனக் கண்டார் திருமூலர். சிவம் - செம்பொருள். செம்மை எனும் வேர்ச்சொல்லிலிருந்து வந்தது. திருவள்ளுவர் ''சிவம்'' என்பதைச் ''செம்பொருள்'' என்றே வழங்கினார். கடவுள் முதற்பொருள். சிவமாகிய முதற்பொருளை உள்ளவாறு உணரும் அறிவு ''சிவஞானம்''. ஞானம் என்பது ஐயம் திரிபுகளை நீக்கி உண்மையை அறியும் அறிவு. (ஐயம் - இதுவோ, அதுவோ என்னும் மயக்க நிலை. திரிபு - ஒன்றை மற்றொன்றாக அறிதல். உண்மை - உள்ளவாறு அறிதல்.) போதம் - போதித்தல். ஐயம், திரிபுகளை நீக்கித் தெளிவுண்டாகுமாறு உணர்த்துதல். அதற்காக எழுந்த நூலே ''சிவஞானபோதம்''.*

*மெய்கண்டாரின் சிவஞான போதமானது 12 நூற்பாக்கள் மட்டுமே கொண்ட நூல். அந்நூற்பாக்களில் 40 வரிகள், 216 சொற்கள், 624 எழுத்துக்கள் உள்ளடங்கியுள்ளன. இப்பன்னிரு நூற்பாக்களோடு இணைக்கப்பட்ட அதிகரண உரை ஒன்று காணப்படுகிறது. அதில் 39 அதிகரணங்களும், 81 வெண்பாக்களும் இடம்பெற்றுள்ளன. சைவ சித்தாந்த சாத்திரங்களின் மணிமுடியாக விளங்கும் சிவஞான போதமானது சமயக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் விளக்கிக் கூறும் ஒப்பற்ற நூலாகும். பேரறிஞர் ஐன்ஸ்டீன் என்பாரின் கூற்றுப்படி, ''ஆன்மீகம் சேராத அறிவியல் நொண்டி, அறிவியலில்லாத ஆன்மீகம் குருடு''. எனவே சமயத்தை அறியாத அறிவியலும், அறிவியலை அறியாத சமயமும் குறைபாடுடையன என்பது புலனாகின்றது. இக்குறைபாடில்லாமல் ஆன்மீகத்தை அறிவியல் அடிப்படையில் விளக்கிக் காட்டுவது சிவஞானபோதமாகிய ஆன்மவியல் நூல் ஆகும்.*

**துணை நின்ற நூல்கள்**


1. *ஊ.சுப்பிரமணிய பாரதியார், பகவத் கீதை - உரை (தமிழில்), 2002, கவிதா பதிப்பகம், எண் - 8. முத்துக் கிருஷ்ணன் சாலை, தி நகர், சென்னை - 600 017, இந்தியா.*
2. *திரு. ஜெயமோகன், 2002. இந்து ஞான மரபில் ஆறு தரிசனங்கள் - ஓர் எளிய அறிமுகம்.*
3. *திரு. பழநியப்பன், 2018. வலைத்தள காணொளிப் பதிவு* (You tube) *அத்வைத தத்துவம் பற்றிய உரை, தமிழர் ஆன்மவியல் மாநாடு, அயன்புரம், சென்னை.*
4. *கவிஞர் கலி. புங்குன்றன், 2017. பொசுங்கட்டும் மனுதர்மம், திராவிடர் கழக பதிப்பகம். சென்னை- 600 007.*
5. *முனைவர் மி.சு. எழிலரசி, 2019. சிவஞானபோதம் புதிய விளக்கம், இலக்கியா பதிப்பகம், தமிழக கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம். தூய மரியன்னை கல்லூரி வெளியீடு.*

**References**

1. *C. Subramania Bharathiyar, Bhagavad Gita- Commentary in Tamil, 2002. Kavitha Publications, 8, Muthukrishnan St, T. Nagar, Chennai-600 017, India.*
2. *Jeyamohan, 2002. Indhu Gnana Marabil Aaru Darisanangal – A Simple Intoduction.*
3. *Palaniyappan, 2018. Speech on Advita Philosophy. Conference on Soulology of Tamil.*
4. *A.L. Basham, 1951. History and Doctrines of the Ajivikas: A Vanished Indian Religion.*
5. *Naganathan Gnanakumaran, 1994. Saiva Siddhantath Telivu, V. M Road, Arthiyadi, Point Perdo, Sri Lanka.*
6. *Poet. Kali. Poongunran, 2017. Posungattum Manudharmam, Dhravidar Kazhaga Publicationa, Chennai – 600 007.*